# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2019.04.24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தம்)

***1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 மற்றும் 3** : இவ்வாசகங்கள், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தையும் வேறு எழுத்திலான சட்டங்களையும் திருத்துவதுடன், திருத்தங்களின் சட்டப்பயனானது பின்வரும் சொற்களை மாற்றீடு செய்வதாகும்-

(அ) "மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்" என்னும் சொற்களை இடுதல்;

(ஆ) "மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என்னும் சொற்களை இடுதல்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்ட வாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின் ஏற்புடைமையை நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் நீடிப்பதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நிதியத்தின் ஆதனங்களுக்கும் ஏற்புடையற்பாலனவாக ஆக்குவதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்ட வாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர்" என்னும் சொற்களை மாற்றீடு செய்வதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகத்தின் ஏற்பாடுகள், 2 ஆம் மற்றும் 3 ஆம் வாசகங்களினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையினவாகும்.

## மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தம்)

*ச.வ. - ஓ. 58/2018*

### *1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' என குறிப்பீடு செய்யப்படும் ) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் விரிவுப் பெயர், ''மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கும் வேறு எழுத்திலான சட்டத்துக்குமான பொதுவான திருத்தம்.*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும் -

(அ) ''மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்'' என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ''மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' என்னும் சொற்கள் இடப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில், உடன்படிக்கையில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்திலுள்ள ''மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்'' மற்றும் ''மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' ஆகியவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்'' மற்றும் ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' ஆகியவற்றுக்கான குறிப்பீடு ஒன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, ''நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, நிதியத்தின் எல்லா அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்: -

*''1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல்.*

15அ. நிதியத்தின் எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களும், 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க ஆதனமாக இருக்கின்றதாக கருதப்படுதல் வேண்டும்.''.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, ''வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்'' என்பது, ''மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்'' என்பதற்கான அடுத்துறுநராக இருக்கின்றதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

*ஐயத்தைத் தவிர்த்தல்.*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*